# எனக்குள்ள ‘சுகாதாரப் பராமரிப்பு குறித்த உரிமைகள்’ (My Healthcare Rights)

## அறிவுத்திறன் குறைபாடு உள்ளவர்களுக்கான ஒரு வழிகாட்டி (A guide for people with cognitive impairment)



AUSTRALIAN COMMISSION ON SAFETY AND QUALITY IN HEALTH CARE

Caring for Cognitive Impairment

**‘ஆஸ்திரேலிய சுகாதாரப் பராமரிப்பு உரிமைகள் சாசன’(Australian Charter of Healthcare Rights)த்தில் சுருக்கமாகக் காண்பிக்கப்பட்டுள்ளதைப் போல, சுகாதாரப் பராமரிப்பைப் பெறும் காலத்தில் பாதுகாப்பாக இருப்பதற்கும், ஆதரவுதவி அளிக்கப்படுவதற்குமான உரிமை அறிவுத்திறன் குறைபாடு உள்ளவர்களுக்கு இருக்கிறது.**

அனைத்து வகைப்பட்ட சுகாதாரப் பராமரிப்பு சூழல்களிலும் இருப்பவர்களுக்கு உள்ள உரிமைகள் யாவை என்பதை **‘ஆஸ்திரேலிய சுகாதாரப் பராமரிப்பு உரிமைகள் சாசனம்’ (Australian Charter of Healthcare Rights) விளக்குகிறது.**

சுகாதாரப் பராமரிப்பைப் பெற்றுவரும் காலத்தில், நீங்களோ, நீங்கள் பராமரித்து வரும் ஒருவரோ என்னவெல்லாம் எதிர்பார்க்கலாம் என்பதை இந்த ‘சாசனம்’ விளக்கிச் சொல்கிறது.

**அறிவுத்திறன் குறைபாடு உள்ளவர்கள், பராமரிப்பாளர்கள், குடும்பத்தினர் மற்றும் ஆதரவுதவி அளிப்பவர்கள் ஆகியோருக்கானதாகும் இந்த வழிகாட்டி.** மருத்துவமனை அல்லது மற்ற சுகாதாரப் பராமரிப்பு சூழல்களில் நீங்கள் இருக்கும் காலத்தில் உங்களைப் பாதுகாப்பாகவும், ஆதரவுதவிகளை நீங்கள் பெறும் நிலையிலும் வைத்திருப்பதைப் பற்றிய மேலதிகத் தகவல்களை அளிப்பது இந்தத் தகவல் ஏட்டின் நோக்கமாகும்.

# ‘அறிவுத்திறன் குறைபாடு’ என்றால் என்ன?

**‘மறதிநோய்’ (dementia), ‘சித்தபிரமை’ (delirium), ‘பிறப்பிற்குப் பிறகு ஏற்படும் மூளைச் சேதாரம்’ (acquired brain injury), ‘பக்கவாதம்’ (stroke) அல்லது ‘அறிவுசார் இயலாமை’ (intellectual disability) ஆகிய நிலைகளின் காரணமாக எந்த வயதிலும் ஒருவர் அறிவுத்திறன் குறைபாட்டுடன் வாழக்கூடும்.**

**மறதிநோயைப் போல, அறிவுத்திறன் குறைபாடு என்பது நிரந்தரமானதாக இருக்கலாம், அல்லது சித்தபிரமையைப் போல தற்காலிக அனுபவமாக இருக்கலாம்.**

ஞாபக சக்தி, உணர்ச்சி-வேகங்கள், சிந்தித்தல் அல்லது தொடர்பாடல்கொள்ளல் போன்றவற்றில் அறிவுத்திறன் குறைபாடு உள்ளவர்களுக்கு சிரமங்கள் இருக்கலாம். அறிவுத்திறன் குறைபாட்டில் வெவ்வேறு வகைகள் உள்ளன, மற்றும் ஒவ்வொருவருக்கும் இதனால் ஏற்படும் அனுபவம் வெவ்வேறானதாக இருக்கும்.

மறதிநோயை உள்ளடக்கிய, தற்சமயம் உள்ள அறிவுதிறன் குறைபாடு ஒன்றுடன் வாழ்ந்துவரும் ஒருவருக்கு அவர் மருத்துவமனையில் இருக்கும் காலத்தில் சித்தபிரமை ஏற்படுவதற்கான சாத்தியம் அதிகம் இருக்கிறது.



# நான் தெரிந்துகொள்ள வேண்டிய விடயங்கள் என்ன?

அறிவுத்திறன் குறைபாடு உள்ளவர்களுக்கு உயர்தர சுகாதாரப் பராமரிப்பை அளித்து அவர்களைப் பாதுகாப்பாக வைதிருக்கவேண்டிய தேவைப்பாடு சுகாதாரப் பராமரிப்பு சேவைகளை வழங்கும் சூழல்களில் உள்ளவர்களுக்கு இருக்கிறது.

தீங்குகளிலிருந்து மக்களைப் பாதுகாக்கவும், சுகாதாரப் பராமரிப்பின் தரத்தினை மேம்படுத்துவதற்குமான எட்டு 'தேசிய சுகாதார சேவைப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணயங்கள்' (National Safety and Quality Health Service Standards) ஏற்படுத்தப்பட்டுள்ளன. நோயாளிகளுக்கான பராமரிப்பின் தர அளவினை இந்தத் 'தர நிர்ணயங்கள்' தீர்மானிக்கின்றன, மற்றும் சுகாரதார பராமரிப்பு சூழல்களில் இவை கட்டாயமாக நடைமுறைப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

**சுகாதாரப் பராமரிப்பு சூழல்களில் அறிவுத்திறன் குறைபாடு உள்ளவர்களைப் பாதுகாப்பாகவும், ஆதரவுதவிகள் அளிக்கப்படும் நிலையிலும் வைத்திருப்பதற்காக இணைவாய்ப் பணியாற்றும் வெவ்வேறு குழுவினர்கள் இருக்கிறார்கள்.** அறிவுத்திறன் குறைபாடு உள்ள நபர், பராமரிப்பாளர்கள், குடும்ப அங்கத்தவர்கள் மற்றும் சுகாதாரப் பராமரிப்புப் பணியாளர்கள் ஆகியோர் இதில் உள்ளடங்குவர்.

**மொழிபெயர்த்துரைப்பாளர்கள் மற்றும் மொழிபெயர்ப்பு சேவைகளைப்** பெறும் உரிமை உங்களுக்கு இருக்கிறது. **இந்த சேவைகள் உங்களுக்குத் தேவையா** என்பதை சுகாதாரப் பராமரிப்புப் பணியாளர்கள் தெரிந்துகொள்ளவேண்டியது மிக முக்கியம்.

'மொழிபெயர்ப்பு மற்றும் மொழிபெயர்த்துரைப்பு சேவைகள்' நாளுக்கு 24 மணி நேரமும், வாரம் 7 நாட்களும் கிடைக்கும்: 131 450-ஐ அழையுங்கள்.



# என்னால் என்ன செய்ய முடியும்?

## சித்தபிரமையை உள்ளடக்கிய அறிவுத்திறன் குறைபாடு உள்ளவர்கள்

பின்வரும் விடயங்களை உங்களுடைய மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் இதர சுகாதாரப் பராமரிப்புப் பணியாளர்களுக்குத் தெரிவிப்பதற்கான உரிமை உங்களுக்கு இருக்கிறது:

- எவ்வொரு சமயத்திலும் நீங்கள் வழமையாக இருப்பதைப் போன்ற உணர்வு உங்களுக்கு இல்லாமல் இருந்தால், அதை
- உங்களுக்குத் தேவைப்படும் உதவி என்ன என்பதை
- உங்களுக்கு முக்கியமான விடயங்கள் எவை என்பதை
- சிகிச்சைகளைப் பற்றிய உங்களுடைய விருப்பத்தெரிவுகளை
- உங்களுக்கான 'முன்கூட்டிய பராமரிப்புத் திட்ட'(advance care planning)த்தைப் பற்றி
- நீங்கள் உட்கொண்டுவரும் எவ்வொரு மருந்துகளைப் பற்றியும்.

அறிவார்ந்த சம்மதத்தை அளிக்க உங்களால் இயலுமாகும் வகையில், உங்களுடைய நிலையைப் பற்றியும், சோதனைகள் மற்றும் சிகிச்சைகளினால் கிடைக்கவல்ல பலன்கள் மற்றும் இவற்றினால் ஏற்படக்கூடிய ஆபத்துகள் ஆகியவற்றைப் பற்றியுமான தெளிவான தகவல்களைப் பெறும் உரிமை உங்களுக்கு இருக்கிறது.

முடிவுகளை மேற்கொள்ளும் செயல்பாட்டில் பங்கேற்கவும், இதில் ஆதரவுதவி அளிக்கப்படுவதற்குமான உரிமை உங்களுக்கு இருக்கிறது. உங்களால் சிகிச்சைக்குச் சம்மதிக்க இயலவில்லை என்றால், அவசர-நிலைகள் தவிர்ந்த மற்ற வேளைகளில், உங்களுடைய 'பதிலாள்' (substitute) அல்லது சட்டரீதியான முடிவெடுப்பாளரிடமிருந்து சேவைப் பணியாளர்கள் சம்மதம் பெறவேண்டியது கட்டாயமாகும்.

நீங்கள் விரும்புகிறீர்கள் என்றால், உங்களுடைய பராமரிப்பாளர், குடும்ப அங்கத்தவர் ஒருவர் அல்லது ஆதரவுதவியாளர் ஒருவர் ஈடுபாடு கொள்ளவேண்டும் என்று கேட்கும் உரிமை உங்களுக்கு இருக்கிறது.

பாதுகாப்பான, அமைதியான மற்றும் மதிப்பு-மரியாதை மிக்க சூழலில் நடத்தப்படுவதற்கான உரிமை உங்களுக்கு இருக்கிறது.

உங்களைப் பராமரித்துவரும் போது எதுவும் தவறாக நடந்துவிட்டால், அதைப் பற்றித் தெரிவிக்கப்படுவதற்கான உரிமை உங்களுக்கு இருக்கிறது.

## குடும்ப அங்கத்தவர்களுக்கும், பராமரிப்பாளர்களுக்குமானது

ஒரு குடும்ப அங்கத்தவர் அல்லது பராமரிப்பாளர் என்ற முறையில், சுகாதாரப் பராமரிப்பு அளிக்கப்படும் சூழல்களில் நீங்கள் பராமரித்துவரும் நபருக்கு ஆதரவுதவி அளிக்கப்படுவதையும் அவர் பாதுகாப்பாக இருக்கிறார் என்ற உணர்வு அவருக்கு ஏற்படுவதையும் உறுதிப்படுத்துவதில் உதவ பாதுகாப்பான மற்றும் உயர்தரமான பராமரிப்பிற்கு நீங்கள் பங்களிப்பு செய்யலாம் நீங்கள் பராமரித்துவரும் நபருடைய தேவைகள் மற்றும் விருப்பங்களை உங்களுடைய ஈடுபாடு அனைத்துவேளைகளிலும் பிரதிபலிக்க வேண்டும்.

பின்வருவனவற்றிற்கான பொறுப்பு உங்களுக்கு இருக்கிறது:

- நீங்கள் பராமரித்து வரும் நபர் மருத்துவமனையில் அனுமதிக்கப்படும்போது, அல்லது அங்கு அவர் தங்கியிருக்கும்போது எப்போதாவது அவர் வழமையாக இருப்பதைப் போல இல்லை என்றால், சுகாதாரப் பராமரிப்புப் பணியாளர்களுக்கு அதைத் தெரிவியுங்கள்.
- பராமரிக்கப்படும் நபருடைய அன்றாட அலுவல் வழமை, எப்படிப்பட்ட ஒத்தாசை அவருக்கு உதவியாக இருக்கும், மற்றும் நீங்கள் இல்லாதபோது அவரை எப்படி ஆசுவாசப்படுத்தலாம் என்பனவற்றை சுகாதாரப் பராமரிப்புப் பணியாளர்களுக்கு விளக்கிச் சொல்லுங்கள்.
- பரிந்துரைக்கப்பட்ட மற்றும் பரிந்துரைக்கப்படாத மருந்துகள் மற்றும் அவற்றின் அளவுகள் அனைத்தினது நடப்பு-நாள்-வரைக்குமான பட்டியல் ஒன்றை மருத்துவமனைக்குக் கொடுங்கள், மற்றும் அனைத்து மருந்துகளையும் மருத்துவமனைக்குக் கொண்டுவாருங்கள்.



## குடும்பத்தினரும், பராமரிப்பாளர்களும் உதவுவதற்காக என்ன செய்ய இயலும்?



நீங்கள் பராமரித்துவரும் நபர் வழமையாக இருப்பதைப் போல நடந்துகொள்ளவில்லை என்றால், சுகாதாரப் பராமரிப்புப் பணியாளருடன் **பேசுங்கள்**



கிழமை, திகதி மற்றும் சூழ்நிலை என்ன என்பனவற்றை உங்களுடைய அன்பிற்கு உரியவருக்கு **நினைவூட்டுங்கள்**



கண்-கண்ணாடிகள், செவிமடுப்பு சாதனங்கள், நகர உதவும் சாதனங்கள் மற்றும் செயற்கைப் பற்கள் ஆகியவற்றை அருகில் **வைத்திருங்கள்**



இன்றைய-நாள்-வரைக்குமான மருந்துகள் அனைத்தையும் உங்களுடன் **கொண்டுவாருங்கள்**



குடும்பத்தினர், நண்பர்கள் மற்றும் பரிச்சயமான விடயங்களைப் பற்றிப் **பேசுங்கள்**

See sources.



அறிவுத்திறன் குறைபாடு உள்ளவர்கள் சுகாதாரப் பராமரிப்பைப் பெற்றுவரும் காலத்தில் முடிவுகளை மேற்கொள்ள அவர்களுக்கு ஆதரவுதவியளிக்க வேண்டும் என்பது ஒரு முக்கியமான விடயமாகும்.

- முடிவுகளை மேற்கொள்ளும் திறன் உள்ள ஒருவருக்கு அவரது சொந்த வாழ்க்கையை பற்றிய சுயாதீனமான முடிவுகளை மேற்கொள்வதற்கான உரிமை இருக்கிறது.
- தாமாகவே முடிவுகளை மேற்கொள்ள ஒருவரால் இயலவில்லை என்றால், குடும்பத்தைச் சேர்ந்த பராமரிப்பாளர் அல்லது நண்பர் போன்ற அவர் தெரிவு செய்யும் ஆதரவுதவியாளர் ஒருவருடைய உதவியைப் பெறுவதற்கான உரிமை அவருக்கு இருக்கிறது – இது ஆதரவுதவியோடு கூடிய முடிவு-மேற்கொள்ளல் என்று அழைக்கப்படுகிறது.
- முடிவுகளை மேற்கொள்ள இயலாத நிலை ஒருவருக்கு ஏற்பட்டால் அல்லது அந்த நிலை அவருக்கு ஏற்படும்போது, வேறொரு நபர் யாரும் நியமிக்கப்பட்டிருக்காவிட்டால், அவரால் அல்லது ‘மன்றம்’ (tribunal) ஒன்றினால் முன்கூட்டியே இன்னொரு நபர் நியமிக்கப்படலாம், அல்லது மாநில மற்றும் எல்லைப் பிரதேச சட்டங்களின் கீழ் இன்னொரு நபர் முடிவெடுப்பதற்காக ஒதுக்கப்படலாம் – **‘பதிலாள் மூல முடிவெடுப்பு’ (substitute decision-making)** என்று இது சொல்லப்படுகிறது.

இயலுமான தருணங்களில், சிகிச்சையைப் பற்றிய கலந்துரையாடல்களிலும், தொடர்ந்து அளிக்கப்படும் பராமரிப்பைப் பற்றிய முடிவுகளிலும் பங்குபற்றுவதற்கான சம்மதத்தினை நீங்கள் பராமரித்துவரும் நபரிடமிருந்து நீங்கள் பெற வேண்டும். இப்படிப்பட்டக் கலந்துரையாடல்களில் நீங்கள் பராமரித்துவரும் நபரை இயன்ற அளவிற்கு ஈடுபாடு கொள்ளுமாறு செய்யுங்கள்.

# நான் என்ன எதிர்பார்க்கலாம்?

## சுகாதாரப் பராமரிப்புப் பணியாளர்களிடமிருந்து

அறிவுத்திறன் குறைபாடு உள்ளவர்களுக்குப் பாதுகாப்பான, மதிப்பு-மரியாதை மிக்க மற்றும் உயர்தர பராமரிப்பினை வழங்க வேண்டிய தேவைப்பாடு அனைத்து சுகாதாரப் பராமரிப்புப் பணியாளர்களுக்கும் இருக்கிறது. தேவைப்படும் நேரங்களில் மொழிபெயர்த்துரைப்பாளர் அல்லது மொழிபெயர்ப்பாளர் சேவைகளை அளிக்கவேண்டிய தேவையும் இதில் உள்ளடங்கும்.

ஒருவருக்கு அறிவுத்திறன் குறைபாடு எப்போது ஏற்படுகிறது என்பதை உணர்ந்து, குறைபாடு உள்ள நபருடனும், அவரது பராமரிப்பாளர்கள் மற்றும் குடும்பத்தினருடனும் பாதுகாப்பான, அமைதியான மற்றும் மதிப்பு-மரியாதை மிக்க விதத்தில் இணைவாய்ப் பணியாற்ற வேண்டும் என்ற தேவைப்பாடு அனைத்து சுகாதாரப் பராமரிப்பு அமைப்புகளுக்கும் உள்ளது.

'தேசிய சுகாதார சேவைகள் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணயங்க'(National Safety and Quality Health Service Standards)-ளின் ஒரு பகுதியாக, அறிவுத்திறன் குறைபாட்டுச் சோதனைகளை மேற்கொள்ள வேண்டிய தேவைப்பாடும், நோயாளி ஒருவரது அறிந்துணர் திறனில் ஏற்படும் மாற்றங்களுக்கான பதில் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய தேவைப்பாடும் அனைத்து சுகாதாரப் பராமரிப்பு அமைப்புகளுக்கும் உள்ளன. சித்தபிரமைக்கு ஆளாகும் ஆபத்தில் உள்ளவர்களை அடையாளம் கண்டு, தீங்கினைக் குறைந்தபட்சமாக ஆக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய தேவைப்பாடு 'தர-நிலை 5: விரிவான பராமரிப்புத் தரம்' (Standard 5: Comprehensive Care Standard) -இன் கீழ் சுகாதாரப் பணியாளர்களுக்கு இருக்கிறது.





# திட்டமிட்டபடி விடயங்கள் நடக்கவில்லை என்றால் என்ன செய்வது?

## பின்னூட்டல்கள் மற்றும் முறைப்பாடுகள் குறித்த செயல்முறைகள்

மருத்துவமனைகள் உள்ளடங்க, சுகாதாரப் பராமரிப்பு அமைப்புகள் உங்களுடைய பின்னூட்டலுக்கு முக்கியத்துவம் அளிக்கின்றன. எந்த செயல்களை அமைப்புகள் சிறப்பாகச் செய்கின்றன, மற்றும் சேவைகளை மேம்படுத்திக்கொள்ளவேண்டிய தேவை அவர்களுக்கு எங்கு இருக்கக்கூடும் என்பதை அமைப்புகள் தெரிந்துகொள்ள இது அவர்களுக்கு உதவுகிறது. உங்களுக்கு அளிக்கப்படும் பராமரிப்பைப் பற்றிய அல்லது நீங்கள் பராமரித்துவரும் நபரைப் பற்றிய முறைப்பாடு ஒன்று உங்களுக்கு இருந்தால், சுகாதாரப் பராமரிப்பு அமைப்புடன் அதை நேரடியாகத் தீர்த்துக்கொள்ள முயற்சி செய்யுங்கள். அமைப்பினர் உங்களுக்கு மறுமொழி அளிக்காவிட்டால், அல்லது நீங்கள் பெறும் மறுமொழியில் உங்களுக்கு மகிழ்ச்சி இல்லையென்றால், உங்களுடைய மாநிலத்தின் சுகாதார முறைப்பாடுகள் ஆணையத்துடன் நீங்கள் தொடர்புகொள்ளலாம்.

திட்டமிட்டவாறு விடயங்கள் நடக்கவில்லை என்றால், **‘ஒளிவு-மறைவில்லா வெளிப்படுத்தல்’ (Open Disclosure)** எனும் செயல்முறை ஒன்று இருக்கிறது. பராமரிப்பின் போது நோயாளிக்குத் தீங்கு ஏற்படுத்திய நிகழ்வுகள் என்ன என்பதைப் பற்றி சுகாதாரப் பராமரிப்பினை அளிக்கும் அமைப்பு மற்றும் குறிப்பிட்ட நபர், அவரது குடும்பத்தினர், பராமரிப்பாளர்கள் மற்றும் இதர ஆதரவுதவி நபர்கள் ஆகியோருடன் நடத்தப்படும் கலந்துரையாடலே இந்த ‘ஒளிவு-மறைவில்லா வெளிப்படுத்தல்’ என்பதாகும். ‘ஒளிவு-மறைவில்லா வெளிப்படுத்தல்’-ஐப் பற்றி மேலும் தெரிந்துகொள்ள அடுத்தப் பக்கத்திலுள்ள மேலதிகத் தகவல்களைப் பாருங்கள்.

# மேலதிகத் தகவல்களை நான் எங்கு கா ண லாம்?

## பயனுள்ள வலைத்தலங்கள்

- ‘ஆஸ்திரேலிய சுகாதாரப் பராமரிப்பு உரிமைகள் சாசனம்’ (Australian Charter of Healthcare Rights): **safetyandquality.gov.au/australian-charter-healthcare-rights**
- சேவை நுகர்வோருக்கான ‘ஒளிவு-மறைவில்லா வெளிப்படுத்தல்’ (Open Disclosure) -ஐப் பற்றிய தகவல்கள்: **safetyandquality.gov.au/our-work/clinical-governance/open-disclosure/implementing-open-disclosure-framework/open-disclosure-resources-consumers**
- ‘பாதுகாப்பான சுகாதாரப் பராமரிப்’பிற்கான தலையாய யோசனைக் குறிப்புகள்: **safetyandquality.gov.au/publications-and-resources/resource-library/top-tips-safe-health-care**
- ‘அறிவுத்திறன் குறைபாடு உள்ளவர்களைப் பராமரித்தல்’: **cognitivecare.gov.au**
- ‘(மறதிநோய்) டிமென்ஷியா ஆஸ்திரேலியா’: உதவியிணைப்பு – 1800 100 500 -திங்கள் முதல் வெள்ளி வரை காலை 8.00 மணியில் இருந்து மாலை 8.00 மணி வரை. வலைத்தலம்: **dementia.org.au**
- ‘முன்கூட்டிய பராமரிப்புத் திட்டம் – ஆஸ்திரேலிய உதவியமைப்பு’ (Advance Care Planning Australia): **advancecareplanning.org.au/#/**
- ‘அறிவுத்திறன் வீழ்ச்சி – ஒத்துழைப்பு உதவி மையம்’ (Cognitive Decline Partnership Centre): **cdpc.sydney.edu.au/research/planning-decision-making-and-risk**
- ‘சித்தபிரமை - ஆஸ்திரேலிய உதவியமைப்பு’ (Australian Delirium Association): **delirium.org.au**
- ‘மூளைக் காயங்கள் -ஆஸ்திரேலிய உதவியமைப்பு’ (Brain Injury Australia): 1800 272 461: **braininjuryaustralia.org.au**

## மூலவளங்கள்

1. Sinclair C, Field S, Williams K, Blake M, Bucks RS, Auret K, Clayton J, Kurrle S. ‘முடிவெடுப்பில் உதவி: மறதிநோயுடன் வாழ்பவர்கள், அவர்களது குடும்பத்தினர் மற்றும் பராமரிப்பாளர்களுக்கான வழிகாட்டி – ஸிட்னி’ (Supporting decision-making: A guide for people living with dementia, family members and carers Sydney) CDPC; 2018.
2. Dementia Australia -விலிருந்து தழுவப்பட்டது

## ஏற்புக்கூற்று

Dementia Australia அமைப்புடனும், மறதிநோயுடன் வாழ்ந்துவருபவர்கள் மற்றும் பராமரிப்பாளர்கள் ஆகியோருடனான ஒத்துழைப்புடனும் இந்த மூலவளம் உருவாக்கப்பட்டது.

Caring for Cognitive Impairment

## உபயோகப்படக்கூடிய விளக்கங்கள்:

பொது மற்றும் தனியார் மருத்துவமனைகள், பகல்-வேளை சிகிச்சையகங்கள், வெளி-நோயாளர் சேவைகள், புனர்வாழ்வு மற்றும் பல் மருத்துவமனைகள் மற்றும் இந்த சுகாதாரப் பராமரிப்பு சூழல்களில் உள்-நுழையும் காலங்கள் மற்றும் அவற்றிலிருந்து வெளியேறும் காலங்கள் ஆகியன ‘சுகாதாரப் **பராமரிப்பு சூழல்கள்’ (Healthcare environments)** எனும் பதத்தில் உள்ளடங்கும்.

மூளையைப் பாதிக்கும் கோளாறுகளால் ஏற்படுத்தப்படும் நோயறிகுறிகளின் தொகுதி ஒன்று **‘மறதிநோய்’ (Dementia)** எனப்படுகிறது. இது குறிப்பிட்ட நோய் ஒன்று அல்ல. ஒருவரது சிந்திக்கும் திறன், நடத்தை-முறைகள் மற்றும் அன்றாட அலுவல்களைச் செய்வதற்கான அவரது திறன் ஆகியவற்றை மறதிநோய் பாதிக்கக்கூடும். ஒருவருடைய வழமையான சமூக மற்றும் உணர்வுபூர்வ வாழ்க்கை அல்லது வேலைக் காலம் ஆகியவற்றில் இடையூறு ஏற்படுத்தும் அளவிற்கு மூளையின் இயக்கம் பாதிக்கப்படுகிறது.

**சித்தப்பிரமை** என்பது ஒரு தற்காலிக நிலையாகும். இந்த நிலையில் இருக்கும் ஒருவர் குழப்பமடைந்தும், இருக்கும் இடம் பற்றி குழப்பம் அடைந்தும் , ஒரு விடயத்தின் மீது கவனம் செலுத்த இயலாமலும் இருக்கலாம். சித்தப்பிரமைக்கு சிகிச்சையளிக்காவிட்டால் அதனால் பாரதூரமான விளைவுகள் ஏற்படலாம், ஆனாலும் இதற்கான காரணங்கள் கண்டறியப்பட்டு அவற்றிற்குச் சிகிச்சையளிக்கப்பட்டால், அதைக் குணப்படுத்தலாம். மருந்துகள், நோய்த்தொற்று, நீர்ச்சத்துக்-குறைவு அல்லது மலச்சிக்கல் ஆகியவற்றின் காரணமாக சித்தப்பிரமை ஏற்படலாம்.

**மேலதிகத் தகவல்களுக்கு safetyandquality.gov.au/your-rights எனும் வலைத்தலப் பக்கத்திற்குச் செல்லுங்கள்.**